DINAMALAR

PAGE NO: 03 DATE: 18.02.2023

# பல்கலையில் இன்று மகாசிவராத்திரி

**புதுச்சேரி, பிப். 18–**

புதுச்சேரி பல்கலைக் கழக வேதகிரீஸ்வரர் கோவிலில் முதலாம் ஆண்டு மகாசிவராத்திரி உற்சவம் இன்று (18ம் தேதி) நடக்கிறது.

புதுச்சேரி பல்கலைக் கழக வளாகத்தில் உள்ள வலம்புரி வித்யா விநாயகர், வேதகிரீஸ்வரர் கோவிலில் முதலாம் ஆண்டு மகா சிவராத்திரி உற்சவம், இன்று துணை வேந்தர் குர்மீத் சிங் தலைமையில் நடக்கிறது.

இதில், பக்தர்கள் நேரடியாக சிவபெருமானுக்கு வில்வ இலை அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், வேதகிரீஸ்வரருக்கு நான்கு கால மகா அபிஷேகம் மற்றும் சிறப்பு பூஜை நடக்கிறது.

DINAMANI

18 FEB 2023

PAGE 3



# மத்திய அரசின் உதவியால் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம்

## புதுவை ஆளுநர்



புதுவை ஆளுநர் மாளிகையில் 'புதுச்சேரி பல்லுயிர் விலங்கினங்கள்' என்னும் ஆங்கில நூலை வெளியிட்ட துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன்.

புதுச்சேரி, பிப். 17: மத்திய அரசின் உதவியால் புதுவை மாநிலம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது என துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் தெரிவித்தார்.

புதுவை ஆளுநர் மாளிகையில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 'புதுச்சேரி பல்லுயிர் விலங்கினங்கள்' என்னும் ஆங்கில நூல் வெளியீட்டு விழா விழாவில் முதல் பிரதியை வெளியிட்டு அவர் பேசியதாவது: புதுவை மாநிலத்தில் உள்ள இயற்கை வளங்கள் அடையாளம் காணப்பட்டு நூல் வடிவம் பெற்றிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அண்மைக் காலமாக புதுவையின் முன்னேற்றத்துக்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பிரதமர் மோடி ஆட்சிப் பொறுப்பேற்றதில் இருந்து நாட்டின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், சுகாதாரத்திலும் கவனம் செலுத்தி வருகிறார். அதனடிப்படையில், புதுவையின் முன்னேற்றத்திலும் மத்திய அரசு அக்கறையுடன் செயல்படுகிறது. மக்களுக்கான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசின் உதவியால் புதுவை அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ளது என்றார் தமிழிசை.

நிகழ்ச்சியில் கொல்கத்தாவில் உள்ள இந்திய விலங்குகள் கணக்கெடுப்பு நிறுவன இயக்குநர் திரித்திபானர்ஜி, கூடுதல் இயக்குநர் சி.ரகுநாதன், புதுவை பல்கலைக் கழக துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அந்தமான் தீவு போர்ட்பிளேர் இந்திய வனவிலங்குகள் கணக்கெடுப்பு நிறுவன அலுவலர் சி.சிவபெருமான் நன்றி கூறினார்.

**மகிழ் நூலகம் திறப்பு:** புதுச்சேரி அசோக் நகர் பூங்காவில் கலைப் பண்பாட்டுத் துறை சார்பில் குழந்தைகள் மகிழ் நூலகத்தை துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை செளந்தரராஜன் வெள்ளிக்கிழமை திறந்து வைத்து பேசியதாவது: குழந்தைகள் விளையாட வரும் பல இடங்களில் மகிழ் நூலகங்கள் அமைக்கப்படும். புதுச்சேரி வளர்ச்சி அடைய முழு பங்காற்றுவோம். பொது அறிவு மற்றும் சுயசரிதை நூல்களுக்கும் நேரம் ஒதுக்கிப் படித்தால் சாதனை நிகழ்த்தலாம் என்றார்.

DINAMALAR

18 FEB 2023

PAGE 1

தினமலர்
புதுச்சேரி
நமது ஊர் செய்திகளை தரும் நம்பர் 1 நாளிதழ்
www.dinamalar.com
www.facebook.com/Dinamalardaily
புதுச்சேரி ● சனி ● பிப்ரவரி 18, 2023

**செய்தி சாரல்** கருவடிக்குப்பம் குரு சித்தானந்தா சுவாமி கோவிலில் இன்று சிவராத்திரியை முன்னிட்டு பரதநாட்டியம் மற்றும் இசை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

அதிகபட்சம் 29 °C
21 °C குறைந்தபட்சம்
வானம் தெளிவாக காணப்படும்.

# தேசிய குறியீட்டில் புதுச்சேரி முதலிடம்: கவர்னர் தமிழிசை

**புதுச்சேரி, பிப்.18–** நாட்டின் வளர்ச்சி பாதையில் புதுச்சேரி ஒரு குறிப்பிட தகுந்த இடத்தைப் பிடிக்கும் என கவர்னர் தமிழிசை பேசினார்.

தேசிய விலங்கியல் ஆய்வு நிறுவனம் பதிப்பித்துள்ள 'புதுச்சேரியில் உயிரின வகைகளின் பன்முகத் தன்மை' நூல் வெளியீட்டு விழா கவர்னர் மாளிகையில் நடந்தது.

புதுச்சேரி பல்கலைக்கழகத் துணைவேந்தர் குர்மீத் சிங், தேசிய விலங்கியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநர் திரீத்தி பானர்ஜி மற்றும் விஞ்ஞானிகள், அதிகாரிகள் முன்னிலையில் நூலை வெளியிட்டார். விழாவில் கவர்னர் தமிழிசை பேசியதாவது:

இயற்கை புதுச்சேரிக்கு பல கொடைகளை தந்திருக்கிறது. அண்மையில் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையின் படி சுகாதாரம், உள்கட்டமைப்பு போன்ற தேசிய குறியீடுகளின் அடிப்படையில் புதுச்சேரியில் முதல் இடத்தில் இருக்கிறது. இந்த பெருமை அரசு நிர்வாகத்தையும் புதுச்சேரி மக்களையும் சேரும்.

பிரதமரின் தொலைநோக்குப் பார்வையால் புதுச்சேரி நல்ல வளர்ச்சி அடையும். பசுமை பொருளாதாரம், கடல் வள பொருளாதாரம் போன்றவற்றின் பயனாக நாடு ஐந்தாவது பொருளாதார வல்லரசு நிலையிலிருந்து மூன்றாவது பொருளாதர வல்லரசு நாடாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

நாட்டின் வளர்ச்சி பாதையில் புதுச்சேரி ஒரு குறிப்பிட தகுந்த இடத்தைப் பிடிக்கும். அதற்காகவே நாம் அனைவரும் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு கவர்னர் பேசினார்.

DINAMALAR

18 FEB 2023

PAGE 2

தினமலர்
புதுச்சேரி | சனி | 18.2.2023

# பிம்ஸ்டெக் நாடுகளின் வேளாண் வர்த்தகம் புதுச்சேரியில் இருநாள் கருத்தரங்கம் துவங்கியது



■ புதுச்சேரி அக்கார்டு ஓட்டலில் நடந்த பிம்ஸ்டெக் வேளாண் வர்த்தக இருநாள் கருத்தரங்க துவக்க விழாவில் ஆசியா நாடுகளின் உள்பிராந்திய கணிப்பீடு குறித்த நூலை துணை வேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டார்.

**புதுச்சேரி, பிப். 18–** பிம்ஸ்டெக் அமைப்பின் மண்டல வேளாண் வர்த்தக இருநாள் கருத்தரங்கம் புதுச்சேரியில் நேற்று துவங்கியது.

தென் கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள இந்தியா, இலங்கை, மியான்மர், தாய்லாந்து, நேபாளம், பூட்டான் மற்றும் வங்கதேசம் ஆகிய ஏழு நாடுகள் அடங்கிய பிம்ஸ்டெக் என்ற பெயரில் பன்னாட்டு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பல்துறை தொழில்நுட்ப பொருளாதார கூட்டுறவிற்கான முன்னெடுப்பிற்காக இவ்வமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, வணிகம், முதலீடு, தொழில் நுட்பம், சுற்றுலா, மனித வள மேம்பாடு, வேளாண்மை, மீன்வளம், போக்குவரத்து, தொலை தொடர்பு, நெசவு, தோல் உள்ளிட்டவை குறித்து பரஸ்பர ஒத்துழைப்பு நல்கி வருகின்றன.

இந்த பிம்ஸ்டெக் மண்டல அமைப்பின் வேளாண் வர்த்தகம் குறித்த இருநாள் கருத்தரங்கம் புதுச்சேரியில் உள்ள ஓட்டல் அக்கார்டில் நேற்று துவங்கியது.

சர்வதேச உணவுக் கொள்கை ஆராய்ச்சி நிறுவன ஒருங்கிணைப்பாளர் மகாத்மா பிரதான் வரவேற்றார்.

கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கீதாலட்சுமி இணைய வழியாக நோக்கவுரையாற்றினார்.

புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கருத்தரங்கை துவக்கி வைத்தார். தொடர்ந்து நடந்த சிறப்பு அமர்வுகளில் வங்கதேசம், இந்தியா, மியான்மர், இலங்கை, தாய்லாந்து, நேபாளம், பூட்டான் நாடுகளுக்கு இடையே வேளாண் வர்த்தக வாய்ப்புகள், ஏற்றுமதிகள், தொழில் கொள்கைகள், உணவு தேவை குறித்து விவாதிக்கப்பட்டது.

விழாவில் பிம்ஸ்டெக் சார்பில், ஆசியா நாடுகளின் உள்பிராந்திய கணிப்பீடு குறித்த நூலை துணை வேந்தர் குர்மீத் சிங் வெளியிட்டார். கருத்தரங்கில் பேராசிரியர் மொகந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கருத்தரங்கம் இன்று நிறைவு பெறுகிறது.

DINAKARAN

PAGE NO: 14 DATE: 18.02.2023

### பல்கலை முன்னாள் மாணவிக்கு

# பிரிட்டிஷ் கவுன்சில் விருது

## துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு

**புதுச்சேரி, பிப். 18:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவியான முனைவர் தபஸ்ஸும் அப்பாஸி என்பவர் சர்வதேச விருதான பிரிட்டிஷ் கவுன்சிலின் மகளிர் அறிவியல் ஃபெல்லோஷிப் என்ற விருதை பெற்றுள்ளார். அவருக்கு புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத்சிங் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

உலக தரவரிசை பட்டியலில் உயர்ந்த இடத்தில் உள்ள எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் அவர் அதனைப் பெறவுள்ளார் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. மேலும், அவர் அங்கு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கக் கூடிய வகையில், ஆற்றல் மற்றும் சுற்றுச்சூழலை நிர்வகிப்பதில் செயற்கை நுண்ணறிவு நுட்பங்களைப் பயன்படுத்துவதில் பணியாற்றவுள்ளார்.

இவர் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் எம்.டெக் பயில்கையில், அத்துறையில் முதலிடம் பெற்றதற்காக தங்கப் பதக்கம் வென்றார். இது அவரை உலகளாவிய அறிவியல் துறையில் வளர்ந்து வரும் நட்சத்திரமாகவும் உலகின் ஒட்டுமொத்த சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவராகவும் மாற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.



▶ பிரிட்டிஷ் கவுன்சில் விருது பெற்ற புதுச்சேரி பல்கலைக்கழக முன்னாள் மாணவிக்கு துணைவேந்தர் குர்மீத் சிங் பாராட்டு தெரிவித்தார்.

DINAKARAN

PAGE NO: 15 DATE: 18.02.2023

ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புக்கான

# கியூட் தேர்வுக்கு மாணவர்கள் விண்ணப்பிக்க அறிவுறுத்தல்

புதுச்சேரி, பிப். 18: புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தேசிய தேர்வு முகமையின் பல்கலைக்கழக நுழைவு தேர்வு (கியூட்-யூஜி) அடிப்படையில் புதுவை பல்கலைக்கழகம் வழங்கும் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கான இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கான விண்ணப்ப தளம் திறக்கப்பட்டுள்ளது. 2023-24ம் கல்வியாண்டிற்கான ஒருங்கிணைந்த முதுநிலை பாடப்பிரிவில் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்கள் *https://cuet.samarth.ac.in/.* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

*www.pondiuni.edu.in/admissions-2023-24/* என்ற முகவரியில் உள்ள பாடப்பிரிவுகளுக்கான தகுதி அளவுகோல்கள் மற்றும் தேவையான பாடம் ஆகியவற்றிற்காக பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டை பார்க்கவும். *https://cuet.samarth.ac.in/* என்ற தேசிய தேர்வு முகமையின் இணையதளத்தை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பல்வேறு 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கான இணையவழி விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கு மார்ச் 12ம் தேதி கடைசி நாளாகும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DAILY TANTHI

PAGE NO: 11 DATE: 18.02.2023

புதுவை பல்கலைக்கழகத்தில் சேர

# கியூட் தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, பிப்.18-

புதுவை பல்கலைக்கழக உதவி பதிவாளர் மகேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தேசிய தேர்வு முகமையின் பொது பல்கலைக்கழக நுழைவுத் தேர்வு (கியூட்) அடிப்படையில் புதுவை பல்கலைக்கழகம் வழங்கும் 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை படிப்புகளுக்கான இணையவழி விண்ணப்பதளம் திறக்கப்பட்டுள்ளது. 2022-23 கல்வியாண்டிற்கான ஒருங்கிணைந்த முதுநிலைபடிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் கியூட் தேர்வுக்கு இணைய வழியில் (https://cuet.samarth.ac.in) விண்ணப்பிக்கலாம். www.pondiuni.edu.in/admissions-2023-24 என்ற முகவரியில் உள்ள திட்டங்களுக்கான தகுதி அளவுகோல்கள் மற்றும் தேவையான பாடங்கள் ஆகியவற்றுக்காக பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டில் தெரிந்து கொள்ளலாம்.

மேலும் https://cuet.samarth.ac.inஎன்ற இணையதளத்திலும் அறிந்து கொள்ளலாம். பல்வேறு 5 ஆண்டு ஒருங்கிணைந்த முதுநிலை திட்டங்களுக்கான இணையவழி விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மார்ச் 12-ந்தேதி ஆகும்.

இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

DAILY THANTHI

PAGE No.:11

DATE : 18-02-2023

### ஷேக்ஸ்பியர் எழுதிய கிங் லியர்:

# புதுவை பல்கலைக்கழகத்தில் நாடகம்

புதுச்சேரி, பிப்.18-

புதுவை பல்கலைக்கழகத்தின் நிகழ்கலைப்பள்ளியில் ஷேக்ஸ்பியர் எழுதிய கிங் லியர் என்ற நாடகம் தமிழில் இறுதியாட்டம் என்ற தலைப்பில் நிகழ்த்தப்படுகிறது. நேற்று தொடங்கிய இந்த நாடகம் இன்றும் (சனிக்கிழமை), நாளையும் (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.30 மணிக்கு நடக்கிறது.

எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி தமிழாக்கம் செய்த இந்த நாடகத்தை பேராசிரியர் ராசு இயக்குகிறார். நிகழ்கலைப் பள்ளியின் 2-ம் ஆண்டு மாணவர்கள் இந்த நாடகத்தில் நடிக்கின்றனர். கடந்த 1988-ம் ஆண்டு நாடகக்கலைக்காக தொடங்கப்பட்ட இப்பள்ளி தனித்துவமான பல நாடகங்களை மாநில மற்றும் தேசிய அளவில் தொடர்ந்து தயாரித்து நிகழ்த்தி வருவது குறிப்பிடத்தக்கது.

DAILY THANTHI

PAGE NO: 11

DATE: 18.02.2023



உயிரின வகைகளின் பன்முகத்தன்மை என்ற புத்தகத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்ட போது எடுத்த படம்.

# உயிரின வகைகளின் பன்முகத்தன்மை புத்தகம்

## கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டார்

புதுச்சேரி, பிப்.18-

உயிரின வகைகளின் பன்முகத்தன்மை புத்தகத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்டார்.

### புத்தகம் வெளியீடு

தேசிய விலங்கியல் ஆய்வு நிறுவனம் சார்பில் புதுச்சேரியில் உயிரின வகைகளின் பன்முகத்தன்மை புத்தக வெளியீட்டு விழா கவர்னர் மாளிகையில் நேற்று நடந்தது. புத்தகத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட புதுவை பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் பெற்றுக்கொண்டார்.

விழாவில் கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் பேசும்போது, புதுச்சேரிக்கு இயற்கை பல கொடைகளை தந்துள்ளது. சுகாதாரம், உட்கட்டமைப்பில் தேசிய குறியீடுகளின் அடிப்படையில் புதுவை முதல் இடத்தில் உள்ளது. நாட்டின் வளர்ச்சிப் பாதையில் புதுச்சேரி ஒரு குறிப்பிட தகுந்த இடத்தை பிடிக்கும். அதற்காக பாடுபட்டுகொண்டிருப்பதாக கூறினார்.

நிகழ்ச்சியில் தேசிய விலங்கியல் ஆய்வு நிறுவன இயக்குனர் திரீத்தி பானர்ஜி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### பூங்காவில் நூலகம்

புதுவையில் குழந்தைகளிடம் புத்தகம் படிக்கும் ஆர்வத்தை தூண்டும் வகையில் அவர்கள் விளையாடும் இடமான பூங்காக்களில் நூலகம் அமைக்கதிட்டமிடப்பட்டது. இதன்படி லாஸ்பேட்டை அசோக்நகர் பூங்காவில் கலை பண்பாட்டுத்துறை சார்பில் குழந்தைகள் மகிழ் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. நூலகத்தை கவர்னர் தமிழிசை சவுந்தரராஜன் திறந்து வைத்து குழந்தைகளுடன் கலந்துரையாடினார்.

அப்போது அவர், குழந்தைகள் நூலகத்தை தேடிப்போய் படிப்பது கஷ்டம் என்றும், அவர்கள் வரும் இடங்களில் புத்தகங்களை வைத்தால் படிக்கும் பழக்கம் ஏற்படும் என்றும், குழந்தைகள் நமது அஸ்திவாரம். அவர்களை மேம்படுத்தினால் சமூகம் தானாக மேம்படும் என்றும் குறிப்பிட்டார். அன்றையை பாடத்துடன் பொது அறிவு, சுயசரிதைகளை படிப்பதற்கும் நேரம் ஒதுக்கினால்தான் சாதனையாளர்களாக முடியும் என்றும் குறிப்பிட்டார்.

நிகழ்ச்சியில் கலை பண்பாட்டுத்துறை இயக்குனர் சிவராஜன், கண்காணிப்பாளர்கள் சக்தி நாராயணன், செந்தில்நாதன், அருள்ராஜ், ஆலோசகர் சம்பந்தம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.